## அலகு – 18

## தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டெழுதுதல்

### தொடர் இலக்கணம்

எட்வர்டு வந்தான்.

இந்தச் சொற்றொடரில் பெயர்ச்சொல், எட்வர்டு என்பதாகும். இந்தச் சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்.

கனகாம்பரம் பூத்தது.

இந்தச் சொற்றொடரில் வினைச்சொல், பூத்தது. இந்த வினைச்சொல்லே பயனிலை ஆகும். ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் பயனிலை என்கிறோம்.

மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்.

இத்தொ டரில், சொற்றொடர் எழுவதற்குக் காரணமாக அமைந்த மீனா என்னும் பெயர்ச்சொல்லே எழுவாய் ஆகும். அவ்வெழுவாயின் பயனிலை சூடினாள் என்பதாகும். எனில், மற்றொரு பெயர்ச்சொல்லான கனகாம்பரம் என்பது யாது? அது செயப்படுபொருள் என்று அழைக்கப்படுகிறது. எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே , செயப்படுபொருள் ஆகும்.

படித்தாய்.

இத்தொடரில் படித்தாய் என்பது பயனிலை. நீ என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை. இதைத் தோன்றா எழுவாய் என்று கூறுகிறோம்.

நான் வந்தேன்.

இத்தொடரில் வினைமுற்று பயனிலையாக வந்தது. இது வினைப் பயனிலை எனப்படும்.

சொன்னவள் கலா.

இங்கு கலா என்னும் பெயர்ச்சொ ல் பயனிலையாக வந்துள்ளது. இது பெயர்ப் பயனிலை எனப்படும்.

விளையாடுபவன் யார்?

இங்கு யார் என்னும் வினாச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது வினாப் பயனிலை எனப்படும்.

சில இடங்கள் தவிர, ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில்தான் வரவேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

எடுத்துக்காட்டு: நான் பாடத்தைப் படித்தேன் (எழுவாய், செயப்படுபொருள், பயனிலை)

பாடத்தை நான் படித்தேன் (செயப்படுபொருள், எழுவாய், பயனிலை)

படித்தேன் நான் பாடத்தை (பயனிலை, எழுவாய், செயப்படுபொருள்)

நான் படித்தேன் பாடத்தை (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்)

பாடத்தைப் படித்தேன் நான் (செயப்படுபொருள், பயனிலை, எழுவாய் )

நல்ல நூல் ஒன்று படித்தேன்.

இத்தொடரில் நல்ல என்னும் சொல், எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருகிறது. இவ்வாறு அமைவதனைப் பெயரடை என்கிறோம்.

மகிழ்நன் மெல்ல வந்தான்.

இத்தொடரில் மெல்ல என்னும் சொல், வந்தான் என்னும் வினைப் பயனிலைக்கு அடையாக வருகிறது. இதை வினையடை என்கிறோம்.

வினை வகைகள் – தன்வினை, பிறவினை

மாணவர்கள் கால்பந்து விளையாடிக்கொண்டிருக்கின்றார்கள். எங்கும் விளையாட்டு, மகிழ்ச்சியின் ஆரவாரம். கண்ணன் முகமதுவை நோக்கி, “பந்தை என்னிடம் உருட்டு” என்று கத்தினான். முகமது பந்தைக் கண்ணனிடம்

உருட்டினான். பந்து உருண்டது. கண்ணன் முகமது மூலம் பந்தை உருட்டவைத்தான்.

மேற்கண்ட சூழலில்,

பந்து உருண்டது என்பது தன்வினை.

உருட்டவைத்தான் என்பது பிறவினை.

எழுவாய் ஒரு வினையைச் செய்தால் அது தன்வினை எனப்படும்.

எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது பிறவினை எனப்படும்.

பிறவினைகள், வி, பி போன்ற விகுதிகளைக் கொண்டும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| தன்வினை | அவன் திருந்தினான்<br>அவர்கள் நன்றாகப் படித்தனர் |
| பிறவினை | அவனைத் திருந்தச் செய்தான்<br>தந்தை மகனை நன்றாகப் படிக்க வைத்தார்.<br>பள்ளிக்குப் புத்தகங்கள் வருவித்தார். |

**செய்வினை, செயப்பாட்டுவினை**

அப்பா சொன்னார், “குமுதா, இலையில் உள்ள இட்டிலியை விரைந்து சாப்பிடு. அடுத்துத் தோசை வரப்போகிறது.” அவள் சாப்பிட்டு முடிப்பதற் குள், தோசை வைக்கப்பட்டது.

அப்பா சொன்னார் – செய்வினைத் தொடர்

தோசை வைக்கப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்

இது போலவே, பாட்டுப் பாடுகிறாள் – செய்வினைத் தொடர்

பாட்டுப் (அவளால்) பாடப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்

’படு’ என்னும் துணை வினைச்சொல் செயப்பாட்டு வினைத்தொடரில் சேர்ந்துவிடுகிறது.

’படு’ என்பதைப் போல, ‘உண், பெறு’ முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன. அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து ‘ஆயிற்று, போயிற்று, போனது’ முதலான துணை வினைகள் செயப்பாட்டுவினைகளை உருவாக்குகின்றன.

கோவலன் கொலையுண்டான்.

ஓவியம் குமரனால் வரையப்பட்டது.

வீடு கட்டியாயிற்று.

சட்டி உடைந்து போயிற்று.

பணம் காணாமல் போனது.

**பயன்பாட்டுத் தொடர்கள்**

| | |
|---|---|
| அப்துல் நேற்று வந்தான் | தன்வினைத் தொடர் |
| அப்துல் நேற்று வருவித்தான் | பிறவினைத் தொடர் |
| கவிதா உரை படித்தாள் | செய்வினைத் தொடர் |
| உரை கவிதாவால் படிக்கப்பட்டது | செயப்பாட்டுவினைத் தொடர் |
| குமரன் மழையில் நனைந்தான் | உடன்பாட்டுவினைத் தொடர் |
| குமரன் மழையில் நனையவில்லை | எதிர்மறைவினைத் தொடர் |
| என் அண்ணன் நாளை வருவான் | செய்தித் தொடர் |

| | |
|---|---|
| எவ்வளவு உயரமான மரம்! | உணர்ச்சித் தொடர் |
| உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார்? | வினாத் தொடர் |
| பூக்களைப் பறிக்கா தீர் | கட்டளைத் தொடர் |
| இது நாற்காலி<br>அவன் மாணவன் | பெயர்ப் பயனிலைத் தொடர் |

**பகுபத உறுப்பிலக்கணம்:**

பதம்(சொல்) இருவகைப் படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும். |
| விகுதி (இறுதிநிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டுவதாகவும் அமையும். |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| சந்தி | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| விகாரம் | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

**பகுதி:**

ஊரன் - ஊர், வரைந்தான் – வரை, நடிகன் - நடி, மடித்தார் – மடி, பார்த்தான் - பார், மகிழ்ந்தாள் – மகிழ்.

**விகுதி:**

| | | |
|---|---|---|
| படித்தான் | ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன் |
| பாடுகிறாள் | ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள் |
| பெற்றார் | ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர் |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ |
| சிரிக்கிறேன் | ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன் |
| உண்டோம் | ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம் |
| செய்தாய் | ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ |
| பாரீர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர் |
| அழகிய, பேசும் | அ, உம் – பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |

| | | |
|---|---|---|
| வந்து, தேடி | உ, இ - வினையெச்ச விகுதிகள் | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர் |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு… |

**இடைநிலைகள்**

| | | |
|---|---|---|
| வென்றார் | ற்-இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன் |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று |
| புகுவான், செய்கேன் | வ், க் – எதிர்கால இடைநிலைகள் | ப், வ், க் |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ |
| மகிழ்ச்சி, அறிஞன் | ச், ஞ் – பெயர் இடைநிலைகள் | ஞ், ந், வ், ச், த் |

**சந்தி**

| | | |
|---|---|---|
| உறுத்தும் | த் - சந்தி | த், ப், க் |
| பொருந்திய | ய் – உடம்படுமெய் சந்தி | ய், வ் |

**சாரியை**

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன் |

**எழுத்துப்பேறு**

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

செய்யாதே: செய் + ய் + ஆ + த் + ஏ

செய் – பகுதி, ய் – சந்தி, ஆ – எதிர்மறை இடைநிலை, த் – எழுத்துப்பேறு, ஏ – முன்னிலை ஒருமை ஏவல், வினைமுற்று விகுதி.

எடுத்துக்காட்டுகள்

வந்தனன்: வா(வ) + த் (ந்) + த் + அன் + அன்

வா – பகுதி ('வ' ஆனது விகாரம்); த்(ந்) – சந்தி ('ந்' ஆனது விகாரம்); த் – இறந்தகால இடைநிலை; அன் – சாரியை; அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

**துணைவினைகள்**

வினைவகைகள்

வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், சொற்றொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படைகளில் பலவகையாகப் பாகுபடுத்தலாம்.

தனிவினையும் கூட்டுவினையும்

வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் தனிவினை, கூட்டுவினை என இருவகைப்படுத்தலாம்.

**தனிவினை**

படி, படியுங்கள், படிக்கிறார்கள்.

மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். இவற்றில் படி என்னும் வினையடியும் சில ஒட்டுகளும் உள்ளன. படி என்னும் வினையடி, பகாப்பதம் ஆகும். அதை மேலும்

பொருள்தரக்கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு, தனிவினையடிகளை அல்லது தனிவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைத் தனிவினை என்பர்.

**கூட்டுவினை**

ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள், தந்தியடித்தேன், முன்னேறினோம்.

மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். ஆசைப்படு, கண்டுபிடி, தந்தியடி, முன்னேறு என்பன அவற்றின் வினையடிகள். அவை பகுபதங்கள் ஆகும். இவ்வாறு பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டுவினையடிகள் என்பர். அவ்வகையில் கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டுவினை என்பர்.

கூட்டுவினைகள் பொதுவாக மூன்று வகையாக ஆக்கப்படுகின்றன.

**1) பெயர் + வினை = வினை**

தந்தி + அடி = தந்தியடி

ஆணை + இடு = ஆணையிடு

கேள்வி + படு = கேள்விப்படு

**2) வினை + வினை = வினை**

கண்டு + பிடி = கண்டுபிடி

சுட்டி+ காட்டு = சுட்டிக்காட்டு

சொல்லி + கொடு = சொல்லிக்கொடு

**3) இடை + வினை = வினை**

முன் + ஏறு = முன்னேறு

பின் + பற்று = பின்பற்று

கீழ் + இறங்கு = கீழிறங்கு

முதல்வினையும் துணைவினையும்

நான் படம் பார்த்தேன்.

கண்ணன் போவதைப் பார்த்தேன்.

இந்தச் சொற்றொடர்களில், பார் என்னும் வினை, கண்களால் பார்த்தல் என்னும் பொருளைத் தருகிறது. இது பார் என்னும் வினையின் அடிப்படை ப் பொருள் அல்லது சொற்பொருள் (LEXICAL MEANING) எனலாம்.

ஓடப் பார்த்தேன்.

எழுதிப் பார்த்தாள்.

இந்தச் சொற்றொடர்களில் ஓடப்பார், எழுதிப்பார் என்பன கூட்டுவினைகள் ஆகும். இவற்றில் இரண்டு உறுப்புகள் உள்ளன. ஓட, எழுதி என்பன முதல் உறுப்புகள். இவை அந்தந்த வினைகளின் அடிப்படை ப் பொருளைத் தருகின்றன. பார் என்பது இரண்டாவது உறுப்பு. இது இவ்வினையின் அடிப்படைப் பொருளான பார்த்தல் என்னும் பொருளைத் தராமல் தனது முதல் உறுப்போடு சேர்ந்து வேறு பொருள் தருகிறது.

ஓடப் பார்த்தேன் - இதில் பார் என்பது முயன்றேன் என்னும் முயற்சிப் பொருளைத் தருகிறது.

எழுதிப் பார்த்தாள் - இதில் பார் என்பது சோதித்து அறிதல் என்னும் பொருளைத் தருகிறது.

ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை, முதல் வினை (MAIN VERB) எனப்படும். ஒரு கூட்டு வினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விட்டுவிட்டு முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை, துணைவினை எனப்படும்.

கூட்டுவினையின் முதல் வினை செய அல்லது செய்து என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும். துணைவினை, வினையடி வடிவில் இருக்கும். துணைவினையே

திணை, பால், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறும். தமிழில் ஏறத்தாழ 40 துணைவினைகள் உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை முதல்வினையாகவும் செயல்படுகின்றன.

பார், இரு, வை, கொள், போ, வா, முடி, விடு, தள்ளு, போடு, கொடு, காட்டு முதலானவை இருவகை வினைகளாகவும் செயல்படுகின்றன.

**துணைவினைகளின் பண்புகள்**

1. துணைவினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்துகின்றன.
2. இவை முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு மெருகூட்டுகின்றன.
3. பேச்சு மொழியிலேயே துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

| வினையடி | முதல்வினை | துணைவினை |
|---|---|---|
| இரு | புத்தகம் மேசையில் இருக்கிறது. | நான் மதுரைக்குப் போயிருக்கிறேன். |
| | என்னிடம் பணம் இருக்கிறது. | அப்பா வந்திருக்கிறார். |
| வை | அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள். | நீ என்னை அழ வைக்காதே |
| | அவன் வானொலியில் பாட்டு வைத்தான். | அவர் ஒருவரைப் பாட வைத்தார். |
| கொள் | பானை நான்கு படி அரிசி கொள்ளும். | நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான். |
| | நான் சொன்னதை நீ க ருத் தி ல் | நோயாளியைப் பார்த்துக் |

| | | |
|---|---|---|
| | கொள்ளவில்லை. | கொள்கிறேன். |
| போ | அவன் எங்கே போகிறான்? | மழை பெய்யப் போகிறது. |
| | நான் கடைக்குப் போனேன். | நான் பயந்துபோனேன். |
| வா | நீ நாளைக்கு வீட்டுக்கு வா. | அந்நியர் நம்மை ஆண்டு வந்தனர். |
| | எனக்கு இப்போதுதான் புத்தி வந்தது. | வானம் இருண்டு வருகிறது. |
| விடு | யாரையும் உள்ளே விடாதே | அடுத்த மாதம் நான் போய்விடுவேன். |
| | மழைவிட்டதும் போகலாம். | அப்பா இனி வந்துவிடுவார். |
| தள்ளு | அவன் என்னைக் கீழே தள்ளினான். | அவர் கதைகதையாக எழுதித்தள்ளுகிறார். |
| | காய்கறிவண்டியைத் தள்ளிச் சென்றார். | அவன் அனைத்தையும் வாசித்துத் தள்ளுகிறான். |
| போடு | புத்தகத்தைக் கீழே போடாதே. | மலிவான விலையில் வாங்கிப் போட்டேன். |
| | தலையில் தொப்பியைப் போடு. | விழித்தவுடன் பாயைச் சுருட்டிப் போடவேண்டும். |
| கொடு | நான் அவருக்குப் பணம் கொடுத்தேன். | பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான். |

| | | |
|---|---|---|
| | அவன் உயிரைக் கொடுத்து வேலை செய்கிறான். | பாடம் சொல்லிக் கொடுப்பேன். |
| காட்டு | தாய் குழந்தைக்கு நிலவைக் காட்டினாள். | ஆசிரியர் செய்யுளைப் பாடிக் காட்டினார். |
| | சான்றோர் காட்டிய பாதையில் செல். | படித்தபடி நடந்துகாட்ட வேண்டும். |

| |
|---|
| தற்காலத் தமிழில் ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய், தள்ளு, தா, தொலை, படு, பார், பொறு, போ, வை, வந்து, விடு, வேண்டாம், முடியும், முடியாது, இயலும், இயலாது, வேண்டும், உள் போன்ற பல சொற்கள் துணைவினைகளாக வழங்குகின்றன. |
| தமிழ் மற்றும் ஜப்பானிய மொழிகளில் துணைவினைகள் முதல் வினைகளுக்குப் பின்பே இடம்பெறும். (எ.கா.) கீழே விழப் பார்த்தான். இத்தொடரில் விழ (விழ) என்பது முதல்வினை; பார்த்தா ன் என்பது துணைவினை.<br><br>தமிழின் துணைவினைக் கொள்கை ஆங்கிலத்தின் துணைவினைக் கொள்கையிலிருந்து வேறுபட்டது. அதாவது, தமிழில் துணைவினையாக வரும் வேர்ச்சொல் சில தொடர்களில் முதல்வினையாகவும் வரும். |

**தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களைக் கண்டறிதல்**

**தன்வினை வாக்கியம்:**

எழுவாய், தானே ஒரு செயலைச் செய்தல் தன்வினை எனப்படும்.

| | | |
|---|---|---|
| எ.கா: இராமன் பாடம் கற்றான் | - | தன்வினை வாக்கியம் |
| தேவி பொம்மை செய்தாள் | - | தன்வினை வாக்கியம் |
| நான் இராமனை திருத்தினேன் | - | தன்வினை வாக்கியம் |
| மாலா சோறு உண்டாள் | - | தன்வினை வாக்கியம் |
| மாறன் தரையில் உருண்டான் | - | தன்வினை வாக்கியம் |
| உழுவர் நிலத்தை உழுதார் | - | தன்வினை வாக்கியம் |

**பிறவினை வாக்கியம்:**

எழுவாய், ஒரு செயலைப் பிறரைக் கொண்டு செய்வித்தல் பிறவினை வாக்கியம் எனப்படும்.

| | | |
|---|---|---|
| எ.கா: இராமன் பாடம் கற்பித்தான் | - | பிறவினை வாக்கியம் |
| தேவி பொம்மை செய்வித்தாள் | - | பிறவினை வாக்கியம் |
| ஆசிரியர் மாணவனை திருத்தினார் | - | பிறவினை வாக்கியம் |
| தாய் குழந்தைக்கு உணவு உண்பித்தாள் | - | பிறவினை வாக்கியம் |

**செய்வினை வாக்கியம்:**

எழுவாய், செய்படுபொருள், பயனிலை என்று வரிசையில் வாக்கியம் அமைதல் செய்வினை வாக்கியம் எனப்படும். செய்படுபொருளோடு ஐ என்ற இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்து வரும். ('ஐ' உருபு மறைந்தும், வெளிப்பட்டும் வரும்).

**செய்பாட்டுவினை வாக்கியம்:**

செய்படுபொருள், எழுவாய், பயனிலை என்ற வரிசையில் வாக்கியம் அமைதல் செய்பாட்டுவினை வாக்கியம் எனப்படும். (எழுவாயோடு 'ஆல்' என்ற மூன்றாம் வேற்றுமை உருபும், பயனிலையோடு 'படு, பட்டது" எனும் சொற்களும் சேர்ந்து வரும்.

| செய்வினை வாக்கியம் | செய்பாட்டுவினை வாக்கியம் |
|---|---|
| மாணவர்கள் வகுப்பைத் தூய்மை செய்தனர் | வகுப்பு மாணவர்களால் தூய்மை செய்யப்பட்டது |
| ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார் | இலக்கணம், ஆசிரியரால் கற்பிக்கப்பட்டது |
| பாரதியார் என்றென்றும் நிலைத்து நிற்கும் இலக்கியங்களைப் பாடியுள்ளார் | நிலைத்து நிற்கும் இலக்கியங்கள் பாரதியாரால் பாடப்பட்டுள்ளது. |
| திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார் | திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. |
| நம்பி நாடகம் நடித்தான் | நாடகம் நம்பியால் நடிக்கப்பட்டது. |